Doi: 10.60072/book.icoge2026.110

# மாணவர் திறனும் நவீனத் தொழில்நுட்பம் ஏற்படுத்தும் முரணும்

**பா.அஜிதா [1*], ச.அ.சுஜா [2]**

[1] தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
[2] தமிழ் உயராய்வு மையம், பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, தமிழ்நாடு, இந்தியா.

*Corresponding author: ajitha1815@gmail.com*

## ஆய்வுச் சுருக்கம்

நவீனத் தொழில்நுட்பங்களான சமூக வலைதளங்கள், திறன்பேசி செயலிகள், செயற்கை நுண்ணறிவு போன்றவை தற்கால மக்களிடையே பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளன. இத்தகு தொழில்நுட்பங்களின் பெரு வளர்ச்சியினால் இன்று, கல்வி தொடர்பான தகவல்களை வீட்டிலிருந்தபடியே அறிந்துகொள்ளமுடிகிறது. ஆனால், இன்று பெரும்பாலான மக்கள், நவீனத் தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய திறன்பேசியைப் பொழுதுபோக்குக் கருவியாகவே கருதுகின்றனர். நவீனத் தொழில்நுட்பத்தை அதிகம் சார்ந்திருப்பதனாலும் இதிலுள்ள பொழுதுபோக்குக் கூறுகளுக்கு மக்கள் அடிமையாவதாலும் மனித சமூகம் பல பாதிப்புகளை எதிர்கொள்கின்றது. குறிப்பாக, மாணவர்களிடையே தகவல் தொடர்பு, சிந்தித்தல் போன்ற திறன்கள் குறைந்து வருவதனைக் காணமுடிகின்றது. திறன்பேசியின் வழி அனைத்துத் தகவல்களையும் அறிந்துகொள்ளமுடியும் என்ற

எண்ணத்தினால் மாணவர்களிடையே ஒருவித அலட்சியப் போக்கு உருவாகிக்கொண்டிருப்பதனைக் காணமுடிகின்றது. அவ்வகையில், இந்த ஆய்வுக் கட்டுரையானது, நவீனத் தொழில்நுட்பத்திற்கும் மாணவர்களின் திறன்களுக்கும் இடையே உள்ள முரண்களை ஆராய்கிறது. இத்தகு முரண்களை ஆராய்வதனால் மாணவச் சமூகம் எதிர்கொள்ளும் பாதிப்புகளையும் அப்பாதிப்புகளைக் களைவதற்கான தீர்வுகளையும் கண்டறியலாம்.

**திறவுச்சொற்கள்**

நவீனத் தொழில்நுட்பம், மாணவச் சமூகம், கல்வி, முரண்கள், செயற்கை நுண்ணறிவு.

**முன்னுரை**

மனித சமூகம் தோன்றிய காலம் தொடங்கி இன்று வரையிலும் உலகில் பலவிதமான மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. மனித சமூகம் நாகரிகம் பெற்ற பின், அச்சமூகத்தின் அறிவுத்தேடல் மென்மேலும் பெருகியது. இதன் விளைவாக, பல்வேறு படைப்புகளும் கண்டுபிடிப்புகளும் தோன்றின. அவ்வாறு மனிதர்களால் உருவாக்கப்பட்ட கண்டுபிடிப்புகளுள் சில கண்டுபிடிப்புகள் நன்மைகளையும் சில கண்டுபிடிப்புகள் தீமைகளையும் ஏற்படுத்துகின்றன. ஆனால் சில கண்டுபிடிப்புகள் நன்மை, தீமை என இருவேறுபட்ட நிலைகளைக் கொண்டிருப்பதனால் நடுநிலையான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அவ்வாறு நடுநிலையான விளைவுகளை ஏற்படுத்தும் கண்டுபிடிப்புகளுள் குறிப்பிடத்தக்கவை நவீனத் தொழில்நுட்பம். செயற்கை நுண்ணறிவு போன்ற நவீனத் தொழில்நுட்பத் தளங்கள் இன்று மக்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக, மாணவச் சமூகத்தில் இதன் தாக்கம்

அதிகளவு காணப்படுதனால், கடின உழைப்பை விரும்பாத, தனிமையை விரும்புகின்ற சமூகமாக அச்சமூகம் மாறி வருவதனைக் காணமுடிகின்றது. நவீனத் தொழில்நுட்பம், மாணவச் சமூகத்தில் மட்டுமின்றி மனித சமூகத்திலும் பலவகையான முரண்களை ஏற்படுத்தியுள்ளன. அவ்வகையில், நவீனத் தொழில்நுட்பத்தினால் மனித சமூகத்தில் ஏற்பட்டுள்ள முரண்களைக் கண்டறிவதோடு, நவீனத் தொழில்நுட்பத்திற்கும் மனித சமூகத்திற்கும் இடையே ஒரு சமநிலையை ஏற்படுத்துவது குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**ஆய்வுமுறை**

நவீனத் தொழில்நுட்பத்தினால் ஏற்படும் முரண்களை விளக்கியுள்ளதால் விளக்கமுறை ஆய்வும் இணையவழிப் படிவம் (Google Form) கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளதால் கலப்பு ஆய்வு முறையும் (Mixed Method Methodology) பயன்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்களை இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட இணையவழிப் படிவத்தில், அணுகல் வரம்பு (Access Limitation) காரணமாக, 35 பங்கேற்பாளர்கள் மட்டுமே தங்கள் கருத்துக்களைப் பதிவு செய்துள்ளனர். இது, நவீனத் தொழில்நுட்பத்தினால் ஏற்படும் முரண்களையும் அதனைக் களைவதற்கான வழிகளையும் நோக்கமாகக் கொண்ட சிறிய அளவிலான ஆய்வுக் கட்டுரையாகும்.

**மனித சமூகத்தில் நவீனத் தொழில்நுட்பத்தின் தாக்கம்**

நவீனத் தொழில்நுட்பம் (Modern Technology) என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் இருப்பினும் இங்கு, நவீனத் தொழில்நுட்பம் என்பது சமூக வலைதளங்கள், திறன்பேசி செயலிகள், செயற்கை நுண்ணறிவு போன்றவற்றைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இன்று பலதரப்பட்ட மக்களால் பயன்படுத்தப்படுகின்ற நவீனத்

தொழில்நுட்பம், தனிமனித வாழ்க்கையில் பெரும் மாற்றங்களை நிகழ்த்தியுள்ளன. சக மனிதரோடு உரையாடுவது தொடங்கி சிந்தித்தல், கற்றல் எனப் பல நிலைகளில் நடுநிலையான விளைவுகளை (Neutral Effects) ஏற்படுத்தியுள்ளன. அதாவது, சமூக வலைதளங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதன் வழி தகவல் தொடர்பும் தகவல் பரிமாற்றமும் பெருகியுள்ளது. இதனால் மனித சமூகம் நன்மை அடைகிறது எனினும், அதே சமூக வலைதளங்களால் குடும்ப உறவுகளிடம் உரையாட மறப்பது, அச்சமூகத்திற்குத் தீங்கை விளைவிக்கிறது. இவ்வாறே, மாணவர்களின் சிந்தித்தல், கற்றல் செயல்பாடுகளிலும் நவீனத் தொழில்நுட்பம் பெரும்பங்கு வகிக்கின்றது. நன்மை விளைவிக்ககூடியதே தீமையையும் விளைவிப்பதனால் மாணவச் சமூகம் பல முரண்களை எதிர்கொள்கின்றன. இவ்வாறு நடுநிலை விளைவுகளைக் கொண்டிருப்பதோடு அதன் தேவையும் பெருகியுள்ளதனால், நவீனத் தொழில்நுட்பத்தினால் ஏற்படும் நன்மை தீமை அளவுகள் குறித்து ஆராய்வதை விட, அவை மாணவச் சமூகத்தில் ஏற்படுத்தும் முரண்கள் குறித்து ஆராயப்படவேண்டும். இத்தகு முரண்களை ஆராய்வதனால் மாணவர்களிடையே நவீனத் தொழில்நுட்பத்தினால் ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிவதோடு அப்பாதிப்புகளைக் களைவதற்கான வழிகளையும் கண்டறியலாம்.

**கற்றலில் நவீனத் தொழில்நுட்பத்தின் பங்கு**

திறன்பேசி (Smartphones) அறிமுகமான காலக்கட்டங்களில், வீட்டிற்கு ஒரு திறன்பேசி அல்லது திறன்பேசியே இல்லாத நிலை போன்ற சூழல்களே நிலவியது. ஆனால் இன்று பள்ளிப்பருவ மாணவர்கள் கூடத் தனக்கெனத் தனித் திறன்பேசி கொண்டுள்ளனர். கற்றல் சார்ந்த

விடயங்களுக்காகத் திறன்பேசியைப் பயன்படுத்துவது ஒருபுறம் இருக்க, இது பெரும்பாலும் மாணவர்களிடையே கவனச்சிதறலையே ஏற்படுத்துகின்றது. அவ்வகையில், மாணவர்கள் திறன்பேசியில் பயன்படுத்தும் செயலிகளைப் பின்வருமாறு வகுக்கலாம்.

- தகவல் தொடர்புச் செயலிகள் (Communication Apps)
- பொழுதுபோக்குச் செயலிகள் (Entertainment Apps)
- விளையாட்டுச் செயலிகள் (Gaming Apps)

இவற்றுள் தகவல் தொடர்புச் செயலிகளான புலனம் (Whatsapp), தொலைவரி (Telegram) போன்றவற்றையும் பொழுதுபோக்குச் செயலிகளான வலையொளி (Youtube), படவரி (Instagram), முகநூல் (Facebook) போன்றவற்றையும் மாணவர்கள் கல்வி தொடர்பான விடயங்களுக்காகப் பயன்படுத்துகின்றனர். இவற்றோடு இச்செயலிகளில் இடம்பெற்றுள்ள பிற பொழுதுபோக்குக் கூறுகளையும் பயன்படுத்துகின்றனர். தங்கள் கல்வி தொடர்பான தகவல்களையும் குறிப்புகளையும் பகிர்ந்துகொள்ள புலனம், தொலைவரி போன்ற செயலிகளைப் பயன்படுத்துகின்றனர். மாணவர்கள், தங்கள் பாடம் தொடர்பான ஐயங்களைக் களைவதற்கும் அதில் மென்மேலும் தெளிவு பெறுவதற்கும் வலையொலியில் பிறரால் பதிவேற்றப்பட்ட காணொளிகளைப் பயன்படுத்துகின்றனர். படவரி, முகநூல் போன்றவற்றிலும் பிறரால் பதிவேற்றப்பட்ட கல்வி தொடர்பான குறு காணொளிகள் (Short Videos) காணப்படுகின்றன. பெரும்பாலான மாணவர்கள் குறு காணொளிகளையே விரும்புகின்றனர். குறிப்பாக, பிற மொழி வார்த்தைகளையும்

வாக்கியங்களையும் கற்றுத் தருகின்ற குறு காணொளிகளை மாணவர்கள் மட்டுமின்றி பெரியவர்களும் விரும்பிப் பார்க்கின்றனர்.

**கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாந் துணை**
(**குறள். 414**)

என்ற குறளுக்கிணங்க, மாணவர்கள் பார்த்துக் கற்பதை விட, செவிவழிக் கற்றலைப் பெரிதும் விரும்புகின்றனர். அவ்வகையில், செவிவழிக் கற்றலை ஊக்குவிக்கின்ற ஒலிப்புத்தகங்கள் (Audio Books), மாணவர்களின் பெரும் மதிப்பைப் பெற்றுள்ளன. ஒலிப்புத்தகங்களுக்கான செயலிகளில் கல்வி தொடர்பான புத்தகங்கள், சிறுகதை, புதினம் போன்ற பொழுதுபோக்கு சார்ந்த புத்தகங்கள் எனப் பலவகையான ஒலிப்புத்தகங்கள் காணப்படுகின்றன. விளையாட்டுச் செயலிகளுள் பொழுதுபோக்கிற்கான செயலிகள் மட்டுமின்றி கற்றல் சார்ந்த செயலிகளும் காணப்படுகின்றன. கணக்கு, மொழி போன்றவற்றை விளையாட்டுக்கள் வழி கற்பதற்குப் பல செயலிகள் உள்ளன. இச்செயலிகளைப் பயன்படுத்துவதனால் புத்துணர்ச்சி ஏற்படுவதோடு மென்மேலும் கற்பதற்கான ஆர்வமும் பெருகுகிறது. ஆனால், பெரும்பாலான மாணவர்கள் கற்றல் சார்ந்த விளையாட்டுச் செயலிகளில் ஆர்வம் காட்டுவதில்லை. மாறாக, பொழுதுபோக்கு சார்ந்த விளையாட்டுச் செயலிகளையே பெரிதும் விரும்புகின்றனர்.

இவைதவிர, இன்று மக்கள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்ற செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence), மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. செயற்கை நுண்ணறிவு என்பது மனிதர்களைப் போலவே சிந்தித்தல், கற்றல் போன்ற திறன்களைக் கொண்ட ஒரு நவீனத் தொழில்நுட்பமாகும். ஒரு விடயம் குறித்து

அறிந்துகொள்ள பல வலைத்தளங்களைப் பார்க்கவேண்டிய நிலையில், செயற்கை நுண்ணறிவு, அத்தகவல் குறித்துப் பல வலைத்தளங்களையும் ஆய்ந்தறிந்து ஒரு முடிவைத் தருகிறது. இதனால் குறுகிய நேரத்தில் தெளிவான புரிதல் ஏற்படுகிறது. ஒரு தகவலைத் தேடுவதற்காக மட்டுமின்றி,

- தேர்வுக்குத் தயார்செய்தல்
- மொழிபெயர்த்தல்
- ஒப்படைப்புகள் எழுதுதல்

போன்ற நோக்கங்களுக்காகவும் மாணவர்கள் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துகின்றனர்.

தேர்வுக் காலங்களில் மாணவர்கள் தங்கள் பாடங்களைக் குறுகிய நேரத்தில் படிப்பதற்காகவும் எளிதில் புரிந்துகொள்வதற்காகவும் செயற்கை நுண்ணறிவின் உதவியை நாடுகின்றனர். பாடப்பகுதிகளின் தலைப்புகள் மட்டுமின்றி புத்தகத்திலுள்ள பாடப்பகுதிகளைப் புகைப்படம் எடுத்துக் கொடுத்தாலும் அதனை விரைவாகப் புரிந்து, கற்று சுருக்கமாகத் தொகுத்தளித்துத் தருகின்றது. அவ்வாறே, ஒப்படைப்புகள் எழுதுவதற்கும் நிறைய கருத்துக்களையும் யோசனைகளையும் எடுத்துரைத்து உதவி செய்கிறது. செயற்கை நுண்ணறிவு, பல மொழிகளை அறிந்திருப்பதனால் மொழிபெயர்ப்புக்காகவும் பயன்படுத்துகின்றனர். நாம் கொடுக்கும் வாக்கியத்தை மொழிபெயர்த்துத் தருவதும், நாம் மொழிபெயர்க்கும் வாக்கியத்தைத் திருத்தவும் செய்வதோடு அவ்வாக்கியத்தை, அதே பொருளில் வேறுவிதமாக மாற்றியமைப்பதற்கான பரிந்துரைகளையும் எடுத்துரைக்கிறது. இவ்வாறு இன்றைய நவீனத் தொழில்நுட்பம், கல்வி கற்கும் மாணவர்களுக்குப் பலநிலைகளில் உதவிகரமாகச்

செயல்படுகிறது. அதேசமயம், இதில் பல பொழுதுபோக்குக் கூறுகளும் காணப்படுவதனால் கற்றலை விட பொழுதுபோக்குக் கூறுகளுக்காகவே மாணவர்கள், திறன்பேசியை அதிகம் பயன்படுத்துகின்றனர்.

**நவீனத் தொழில்நுட்பங்களும் முரண்களும்**


மாணவர்கள் தங்களுக்கெனத் தனித் திறன்பேசி வைத்திருப்பது இன்றைய கல்விச்சூழலில் மிகவும் அவசியமானதாகக் கருதப்படுகிறது. அதிலும் சில கல்வி நிறுவனங்கள், மாணவர்கள் தங்களுக்கெனத் தனித் திறன்பேசி வைத்திருக்கவேண்டும் என வலியுறுத்துகின்றன. இவ்வாறு திறன்பேசியின் தேவை பெருகிவிட்ட நிலையில், அவை மனித செயல்பாடுகளில் ஏற்படுத்தும் முரண்களையும் கவனிக்கவேண்டும். அவ்வகையில்,

- தகவல் தொடர்பு (Communication)
- கற்றல்
- சிந்தித்தல்

போன்ற செயல்பாடுகளில் நவீனத் தொழில்நுட்பம் பெரும் தாக்கத்தையும் முரண்களையும் ஏற்படுத்தியுள்ளது.


சமூக வலைதளங்கள் போன்ற செயலிகளின் பெரு வளர்ச்சியினால் நண்பர்கள், உறவினர்கள் மட்டுமின்றி தொலைதூரத்திலுள்ள மனிதர்களையும் எளிதாகத் தொடர்புகொள்ளமுடிகிறது. இது தகவல் தொடர்பை (Communication) எளிதாக்குவதோடு நாடு, மொழி கடந்து மக்களோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வழிவகை செய்கிறது. இவ்வாறு சமூக வலைதளங்கள் இணையவழித் தகவல் தொடர்பை (Online Communication) மேம்படுத்தியிருந்தாலும், சக மனிதனுடனான நேரடித் தொடர்பு குறைந்து வருவதற்கும் காரணமாக அமைகிறது. பெரும்பாலான மக்களுக்கு, ஒரு நபரோடு சமூக வலைதளங்களில்

பேசுவது எளிதாகவும் அதே நபரோடு நேரடியாகப் பேசுவது சற்றுக் கடினமாகவும் உள்ளன.




மேற்குறித்த படிவத்தில் 51.4% பேர் (18 நபர்கள்) இணையவழித் தகவல் தொடர்பை (Online Communication) விட, நேரடித் தகவல் தொடர்பு சற்றுக் கடினமாக இருப்பதாக உணர்கின்றனர். இவ்வாறு, தகவல் தொடர்புக் கருவிகள் பெருகிவிட்ட இன்றைய சூழலிலும் கூட, சக மனிதனுடனான நேரடித் தொடர்பு குறைந்து வருவது கவனிக்கத்தக்கதாகும். இது மக்களிடையே உள்ள பிணைப்பைக் குறைத்துத் தனிமையை விரும்பும் நிலையை ஏற்படுத்துகிறது.


இன்றைய காலக்கட்டத்தில், கல்வி தொடர்பான தகவல்களை வீட்டில் இருந்தபடியே அறிந்துகொள்ள முடிகிறது. மாணவர்கள், தங்கள் பாடம் தொடர்பான தேவையான தகவல்கள் புத்தகத்தில் இருந்தாலும்கூட, உடனுக்குடன் அறிந்துகொள்ள வேண்டி, நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனர். இது குறுகிய நேரத்தில நல்ல புரிதலை ஏற்படுத்துகிறது. எனினும், மாணவர்களிடையே புத்தகம் படித்துக் கற்கின்ற ஆர்வம் குறைந்து வருவதனையும் காணமுடிகின்றது. தேடிப் படிக்க வேண்டும் என்ற ஆர்வமும் இன்றைய மாணவரிடையே மறைந்து வருவதனை இதன்வழி அறியமுடிகிறது.




மேற்குறித்த படிவத்தில், கற்றல் சார்ந்த விடயங்களுக்காக நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத் தொடங்கிய பின், 57.1% பேர் (20 நபர்கள்) புத்தகம் பயன்படுத்துவதைக் கடினமாக உணர்வதாகக் குறிப்பிடுகின்றனர்.

ஒரு தகவலை அறிந்துகொள்வதற்கும் வினாவிற்கான விடையைத் தெரிந்துகொள்வதற்கும் நவீனத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துகின்றனர். இது விரைவாகச் செயல்படுவதோடு தேர்ந்த பரிந்துரைகளையும் (Suggestions) வழங்குகிறது. இவ்வாறு நவீனத் தொழில்நுட்பம் மாணவர்களுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது எனினும் இது அவர்களின் சிந்தனைத்திறனைப் பாதிக்கிறது. எளிய தகவலாயினும் கணநேரத்தில் மறந்த விடையாயினும் அதை முயற்சி செய்து சிந்திக்கும் பொறுமை இன்று பலரிடையே இல்லை. மாறாக, எதையும் உடனே அறிந்துகொள்ளவேண்டும் என்ற ஆவலே காணப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட தலைப்பில் கட்டுரையோ அல்லது ஒப்படைப்போ எழுத முற்படும் மாணவர்கள், தாங்களே சிந்தித்து சில கருத்துக்களை எழுதினாலும் பெரும்பாலான வேளைகளில் நவீனத் தொழில்நுட்பத்தின் உதவியையே நாடுகின்றனர். குறிப்பாக, செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி எழுதும்போது,

மாணவர்களின் சொந்த கருத்துக்களைவிட செயற்கை நுண்ணறிவின் கருத்துக்களே அதிகம் இடம்பெறுகின்றன. இதனால் சில நேரங்களில், மாணவர்கள் அக்கட்டுரையைத் தங்களுடைய படைப்பாக உணர்வதில்லை.




மேற்குறித்த படிவத்தின் அடிப்படையில், 25.7% பேர் (9 நபர்கள்) செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி எழுதியதைத் தங்களுடைய படைப்பாக உணர்ந்ததில்லை என்பதனை ஒப்புக்கொள்கின்றனர். இவ்வாறு நவீனத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி எழுதுவதால், மாணவர்களின் ஆக்கபூர்வமான சிந்தனைகள் வெளிப்படுவது தடைபடுகிறது.

**தீர்வுகள்**

மனித சமூகம், திறன்பேசியின் அடிமையாகாமல், அதனை அளவாகப் பயன்படுத்துவதே சிறந்த தீர்வாகும். சமூக வலைதளங்களிலுள்ள உறவுகளைவிட, நம் அருகிலிருக்கும் உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேச வேண்டும். ஏனெனில், நேரடித் தகவல் தொடர்பில் உணர்வுபூர்வமான உரையாடல் நிகழ்வதோடு பேசுபவருடைய உண்மையான உணர்வுகளையும் புரிந்துகொள்ளமுடிகிறது. சமூகவலைதளத்தில் நன்றாகப் பேசிய நபரோடு நேரடியாக பேசச் சங்கடப்படும் நிலையில், அந்நபரிடம் அதனைத் தெரியப்படுத்துவது நல்லது. இதனால் இருவருக்குமிடையிலான உரையாடல் எளிதாவதோடு அவர்களின் உறவுநிலையும் வலுப்படுகிறது.

மாணவர்கள், திறன்பேசியை அளவாகப் பயன்படுத்தவேண்டிய பொறுப்பினை வளர்த்துக்கொள்ள வேண்டும். ஒரு விடயம் குறித்து நமக்குத் தோன்றுகின்ற சிந்தனைகள் சரியானவையா என அறிந்துகொள்ளவும் மொழிபெயர்ப்புக் குறித்த ஐயங்களுக்கும் செயற்கை நுண்ணறிவு போன்ற நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தலாம். எல்லா சமயங்களிலும் திறன்பேசியின் உதவியை நாடாமல் ஆசிரியரைக் கேட்டும், புத்தகத்தைத் தேடிக் கற்றும் படிக்கின்ற பழக்கத்தினை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும்.

மாணவர்களை நெறிப்படுத்த வேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு உண்டு. 65% பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகள் அதிகளவு திறன்பேசியைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றனர். தங்கள் பிள்ளைகள் எவ்வளவு நேரம் திறன்பேசியைப் பயன்படுத்துகின்றனர் என்பதனைப் பெற்றோர்கள் கண்காணிக்கவேண்டும். திறன்பேசியைப் பயன்படுத்துவதற்கெனத் தனி நேரத்தை ஒதுக்கி, அந்த நேரத்தில் மட்டுமே திறன்பேசியைப் பயன்படுத்த அனுமதிக்கவேண்டும். மாணவர்களை நெறிப்படுத்துவதில் ஆசிரியர்களின் பங்கு அளப்பரியது. நவீனத் தொழில்நுட்பங்களின் உதவியின்றி படிக்கவும் எழுதவும் மாணவர்களை ஊக்குவிக்கவேண்டும். நூலகத்திலுள்ள புத்தகங்களைத் தேடிப் படிக்கும் வகையிலும் புத்தக வாசிப்பை ஊக்குவிக்கின்ற வகையிலும் ஒப்படைப்புகள் அமையவேண்டும். மாணவர்களிடையே நேரடித் தொடர்பினை ஏற்படுத்தும் வகையில் குழு விவாதங்களை ஏற்படுத்தவேண்டும். இதனால் சிந்திக்கின்ற திறனும் அதிகரிக்கும்.

**முடிவுரை**

நவீனத் தொழில்நுட்பம், தேவைக்காகப் பயன்படுத்தத் தொடங்கி, இன்று அத்தியாவசிய பயன்பாடாக உருவெடுத்துள்ளது. அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய ஒரு கருவியைக் கொண்டுள்ளதனால் எந்தவொரு தகவலையும் செய்தியையும் நினைவில் வைத்துக்கொள்ளாது, திறன்பேசியை நம்பி வாழ்கின்ற, ஒரு அலட்சியப் போக்குடைய மனித சமூகம் உருவாகிக்கொண்டிருப்பதனைக் காணமுடிகின்றது. திறன்பேசியையும் அதிலுள்ள நவீனத் தொழில்நுட்பத்தையும் அதிகம் சார்ந்திருக்காமல், தேவையறிந்து பயன்படுத்துகின்ற திறன் மனித சமூகத்திடம் உள்ளது. அத்திறனை மென்மேலும் வளர்த்துக்கொண்டு ஒரு அறிவார்ந்த சமூகமாக உருவாவதோடு வரும் தலைமுறையினர், அத்திறனையும் அறிவையும் பெற வழிவகை செய்யவேண்டும்.

## பார்வை நூல்கள்


தமிழண்ணல் (உ.ஆ), திருவள்ளுவர் அருளிய திருக்குறள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை 625 001. முதற்பதிப்பு: செப்டம்பர் 2000.

Andy Goodeve (2025), Digital Dilemma: Is Technology Helping or Hurting Student Performance? https://www.linkedin.com/pulse/digital-dilemma-technology-helping-hurting-student-andy-goodeve-vlene

Kathleen Rock, The Positives of Social Media for Teens and How Parents Can Guide Safe Use https://www.urmc.rochester.edu/news/publications/health-matters/the-positives-of-social-media-for-teens-and-how-parents-can-guide-safe-use

Lori Wade, How Social Media is Reshaping Today's Education System https://csic.georgetown.edu/magazine/social-media-reshaping-todays-education-system/

Mandy Mok., Dr., (2024), The impact of social media on Teaching and Learning: Transforming education in the digital age
https://www.advance-he.ac.uk/news-and-views/impact-social-media-teaching-and-learning-transforming-education-digital-age

Manjur Kolhar, Raisa Nazir Ahmed Kazi, Abdalla Alameen, Effect of social media use on learning, social interactions, and sleep duration among university students.
https://pmc.ncbi.nlm.nih.gov/articles/PMC8071811/

Nikolas McGehee (2024), AI in Education: Student Usage in Online Learning
https://michiganvirtual.org/research/publications/ai-in-education-student-usage-in-online-learning

Rediff Money Desk (2025), Children Addicted to Online Platforms: Survey
https://money.rediff.com/news/market/children-addicted-to-online-platforms-survey/39068520251222

Sandeep Kaur (2025), Unseen Barriers: The Impact Of Distraction On Student Learning.
https://www.gjar.org/publishpaper/vol12issue2/s1218.pdf

The New York Times (2025), What Students Are Saying About Using A.I. for Schoolwork
https://www.nytimes.com/2025/05/08/learning/what-students-are-saying-about-using-ai-for-schoolwork.html

Tulane University (2024), Impacts of Social Media on Students
https://masterofed-sopa.tulane.edu/articles/impact-of-social-media-on-students/

Vavek Bharwani (2023), The Impact of Social Media on Students
https://yourcommonwealth.org/social-development/the-impact-of-social-media-on-students/